பசுபதிபாண்டியன் தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள், மாநில இளைஞரணி தலைவர் ஈஸ்வரபாண்டியன் தலைமையில் 50 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து தி.மு.க.வில் இணைந்தனர். அருகில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி பரவையில் நடைபெற்ற மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், வழக்கறிஞர் ரகு பாலாஜி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கணேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மதுரை பாலா, மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ஜெயக்குமார், பரவை பேரூர் செயலாளர் ராசாமணி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.கே. ஜெயராமன், வி.பி.திருக்குமரன், சிறைச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரவை மனோகரன், முருகானந்தம், பகுதி செயலாளர்கள் காவேரி, சுதன், அன்பழகன், பழனிச்சாமி, மதன், மதி வெங்கடேஷ், நாகஜோதி சிவா, சசிதேவா, ராஜகோடி, ரமேஷ் வைரமணி, மாவட்ட பிரதிநிதி என்.எஸ்.மணி, மாமன்ற உறுப்பினர்கள் அமுதா முத்துப்போர்க்கிணியன், அமுதா தவமணி, பரவை பேரூராட்சி கவுன்சிலர்கள் பாலசுப்பிரமணி, துரை சரவணன், திருப்பதி, பகவதி ஆறுமுகம், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், பரவை அன்புச்செல்வன், நிர்வாகிகள் ஜே.கருப்பு, ஜே.மரியா, தங்கராஜ், கருணாநிதி, குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்,

தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள்

ஈஸ்வரபாண்டியன் தலைமையில் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில்!

திண்டுக்கல், மார்ச் 25-

தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள், மாநில இளைஞரணி தலைவர் ஈஸ்வரபாண்டியன் தலைமையில் 50 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து கழகத்தில் இணைந்தனர்

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அணைப்பட்டி, பூதிபுரம், அழகுசமுத்திரபட்டி, தாமரைப்பாடி, காமாட்சிபுரம், செம்பட்டி பாளையங்கோட்டை, வேடபட்டி, கதிரையன் குளம், மாங்கரையைச் சேர்ந்த பசுபதி பாண்டியனின் தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் மாநில இளைஞரணி தலைவர் ஈஸ்வரபாண்டியன் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும்,

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்த ஈஸ்வர பாண்டியன் உட்பட மற்றும் அவருடன் வந்த அனைவருக்கும் தி.மு.க. சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்து பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மறைந்த பசுபதிபாண்டியன் கட்சித் தொண்டர்கள் மீதும், நிர்வாகிகள் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்பது எனக்கு தெரியும், அதே அன்பும், பாசமும் இங்கு உங்களுக்கு கிடைக்கும். தொடர்ந்து கழக பணியாற்றுங்கள், நல்ல எதிர்காலம் உள்ளது.

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னை சந்தித்து உங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்றார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்டதுணைச் செயலாளர் நாகராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளார் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ் உட்பட தி.மு.க.வினர் பலர் உடனிருந்தனர்.

தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகரம் சின்னமனூர் தனியார் மண்டபத்தில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் தமிழ்நாடு தலை குனியாது தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மகாராஜன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். முத்துக்குமார் வரவேற்புரை ஆற்றினார். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார். கம்பம் செல்வேந்திரன், ஜெயக்குமார், பாண்டியன், சூர்யா ப.தங்கராஜ், மனோகரன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பதவிக்காக ஊர்ந்து சென்று யார் காலை பிடித்தாரோ அவர்

காலையே வாரிவிட்டவர் எடப்பாடி பழனிசாமி!

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் பேச்சு!

மதுரை, மார்ச் 25 -

மதுரை வடக்கு மாவட்டம் அலங்கா நல்லூரில் சோழவந்தான் தொகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்தார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.ரவீந்திரநாத், ஆர்.கோபால கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

வெற்றி நிச்சயம்!

சோழவந்தான் தொகுதியில் நடைபெறக்கூடிய இந்த எழுச்சிமிகு செயல் வீரர்கள்கூட்டத்தில் கூடியிருக்கும் மக்களின் முகத்தில் தெரியக்கூடிய எழுச்சியே கழகத்தின் வெற்றிக்கு அச்சாரமாக அமைய உள்ளது. மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சகோதரர் மூர்த்தி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தேர்தல் பணியை ஆரம்பித்து விட்டார். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகத்தை இந்த மாவட்டத்தில் வகுத்து வைத்துள்ளார்.

எனவே தி.மு.க.வின் வெற்றி என்பது மதுரை வடக்கு மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் நிச்சயிக்கப்பட்ட வெற்றியாக தெரிகிறது.

தமிழகத்தில் இருப்பது அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி இல்லை அது அ.தி.மு.க.வை உள்ளடக்கிய என் டி ஏ கூட்டணியாகவே செயல்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி என்றால் கூட்டணி பேசுவதற்கும் தொகுதி பங்கீடு செய்வதற்கும் டெல்லிக்கு ஏன் செல்ல வேண்டும்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற தலைவர்கள் இருந்தபோது. எந்த தலைவராக இருந்தாலும் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தான் கூட்டணி பேச்சுவார்த்தை செய்துள்ளார்கள். இப்படி ஒவ்வொரு முறையும் டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய என் டி ஏ கூட்டணியில் அடிமையாக எடப்பாடி பழனிசாமி உள்ளார்.

இவர் தமிழ்நாட்டின் முதல மைச்சராக வந்தால் சுயமாக முடிவெடுத்து செயல்பட முடியுமா, அந்தத் தெம்பும் திராணியும் எடப்பாடி பழனிச்சாமிக்கு உள்ளதா என்றார்

மக்களை சந்திக்காமல் திடீர் முதல மைச்சராக வந்த ஒரு நபர் மீண்டும் முதலமைச்சர் பதவியை அடைவதற்காக பா.ஜ.க.வின் அடிமையாக உள்ளார்.

இவரால் எந்த காலத்திலும் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வரவே முடியாது. இந்தியாவை ஆண்டுவரக் கூடிய மோடி தலைமையிலான பாஜக அரசின் தொழில் வளர்ச்சி எட்டு சதவீதமாக உள்ளது. ஆனால் தமிழகத்திற்கு வரி வருவாய் தராமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாடு11.8% பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது.

நாட்டையும் நாட்டு மக்களையும் வளர்ச்சி பாதையில் அழைத்துச் செல்லக்கூடியமுதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் உள்ளார்.

தமிழ்நாட்டை மோடி தலைமையிலான அரசு எந்த வகையில் வஞ்சிக்க நினைத்தாலும் தமிழ்நாடு எந்த காலத்திலும் டெல்லிக்கு தலை வணங்காது என்ற நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்க கூடிய முதலமைச்சர் தளபதி அவர்கள் மீண்டும் தமிழ்நாட்டின் முதல மைச்சராக வருவது உறுதி.

எடப்பாடி பழனிசாமி யாருக்கும் விசுவாசமாக இருந்தது இல்லை.

முதலமைச்சர் பதவி மீது உள்ள ஆசையினால் 2021 ஆம் ஆண்டு தான் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா அவர்களால் இயற்றப்பட்ட கட்சியின் விதியை திருத்தி தன்னைத்தானே பொதுச் செயலாளர் என்று அறிவித்துக் கொண்டு என்னை கட்சியில் இருந்து வெளியேற்றி அவர் துரோகம் செய்தார்.

அவர் முதலமைச்சராக நான்கரை ஆண்டு காலம் தொடர்வதற்கு உதவி செய்தேன். அந்த நன்றி விசுவாசம் கூட அவருக்கு இல்லை. எடப்பாடி பழனிச்சாமி யாருக்கும் விசுவாசமாக இருந்தது இல்லை. என்னை இரண்டு முறை ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக ஆக்கினார் .

ஆனால் மீண்டும் அவர் அந்த பதவிக்கு வருவதற்கு நான் எந்த இடையூறும் செய்வதற்கு விரும்பாமல் அவருக்கு முதலமைச்சர்பதவியை தந்து விட்டு வெளியேறினேன். அதேபோல் ஜெயலலிதா இறந்தவுடன் சசிகலா அவர்கள் எனக்கு முதலமைச்சர் பதவியை தந்தார். அவரும் கேட்டுக் கொண்டதற்கு கிணங்க முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மனப்பூர்வமாக வெளியேறினேன்.

பழனிச்சாமி பதவி பெறுவதற்காக யார் காலை அவர் ஊர்ந்து சென்று பிடித்தாரோ அவர் காலையே வாரி விட்டு அவரையே தரக்குறைவாக பேசியவர் தான் எடப்பாடி பழனிசாமி.

தளபதி மு.க.ஸ்டாலின்தான் எப்போதும் முதல்வர்!

இதன் காரணமாகத்தான் உள்ளாட்சித் தேர்தல் சட்டமன்றத் தேர்தல் நாடாளுமன்ற தேர்தல் என்று அவர் சந்தித்த 10 தேர்தலிலும் தோல்வி கண்டுள்ளார்.

இனி எத்தனை தேர்தலில் அவர் தன்னை முதலமைச்சர் என்று அறிவித்துக் கொண்டு நின்றாலும் அவருக்கு படு தோல்வியைத் தான் தமிழ்நாட்டு மக்கள் பரிசாக தருவார்கள்.

இந்த உலகத்தை காத்து வரக்கூடியது ஒன்பது கோள்கள் அதில் முக்கியமான ஒரு கோள் என்றால் அது சூரியன் தான் சூரியன் பக்கத்தில் யார் நெருங்கினாலும் சுட்டெரிக்கப்படு வார்கள் அதே போல் தமிழ்நாட்டில் உதயசூரியன் சின்னம்தான் மீண்டும் உதிக்கும் வரும் 2026 சட்டமன்றத் தேர்த லில் மீண்டும் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இரண்டாவது முறையாக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்பார் .

அதற்கு எல்லோரும் ஒற்றுமையாக இருந்து தேர்தல் நாளன்று அதிகாலைகளில் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் அனைவரும் ஒன்றாக சேர்ந்து தமிழ்நாடு வெல்லட்டும் மீண்டும் தமிழக முதலமைச்சராக ஸ்டாலின் தொடரட்டும் என்று கோஷம் போடுங்கள் என்று ஒட்டுமொத்தமாக பொதுமக்களை கோஷமிடுமாறு முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். வலியுறுத்தினார்.

அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:

மதுரை வடக்கு மாவட்டத்தை பொறுத்த அளவில், எந்த ஒரு பணியாக தலைவர் கட்டளையிட்டாலும், அதை முன்னின்று உங்களுடைய ஒட்டு மொத்த ஆதரவோடு அதை வெற்றிகரமாக நடத்தியுள்ளோம்.

நான் இந்த மேடையில் ஒரு அமைச்சராக நிற்பதற்கு காரணம் முதலில் என்னை சோழவந்தான் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய நீங்கள் தான். அதனுடைய தொடர்ச்சியாக, கிழக்கு தொகுதியிலே நான் சட்டமன்ற உறுப்பினராகி, அமைச்சர் பொறுப்பு வந்தாலும், என்றைக்கும் நன்றி உணர்வோடு இந்த சோழவந்தான் தொகுதியினுடைய நிர்வாகி களுக்கும், மக்களுக்கும், இருப்பேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

இன்றைக்கு கிழக்கு தொகுதி, மேலூர் தொகுதி, மேற்கு தொகுதியாக இருந்தாலும், மற்ற தொகுதிகள் எல்லாம் வெற்றி பெறுவதற்கு ஏற்படக்கூடிய மகிழ்ச்சியை விட சோழவந்தான் தொகுதி வெற்றிதான் எனக்கு முதல் மகிழ்ச்சியாக இருக்கும்.

200 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம்!

நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டணி கட்சிகளுக்கும் தொகுதிகளை ஒதுக்கி, சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களையும் சில நாட்களிலே அறிவிக்க உள்ளார், அவ்வாறு முதலமைச்சர் என்ன கட்டளை இடுகிறாரோ, அதை ஏற்று நடத்தக்கூடிய முதன்மையான மாவட்டம் நம்முடைய மாவட்டம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நாம் நம் கட்சி வேட்பாளர்களைப் போல் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நிச்சயமாக, தமிழ்நாட்டிலே 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம் என்று நம் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். துணை முதலமைச்சர் அதற்கான பணியை செய்து கொண்டிருக்கிறார்அதனால் அந்த வெற்றியில் இந்த நான்கு தொகுதிகளிலும் அதிகமான வாக்குகளை பெற வேண்டும். அதிலே சோழவந்தான் தொகுதி முதலிடம் பெற வேண்டும்

எப்போதும் இல்லாத அளவிற்கு சோழவந்தான் தொகுதியில் எழுச்சியை காண முடிகிறது. நமது கழகத் தலைவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழககத்தின் தலைமையில் இருக்கிற அத்தனை கூட்டணி கட்சி நண்பர்களையும் ஒண்றினைத்து, அந்த பணியை வெற்றிகரமாக முடித்து தர வேண்டும்

இந்த வெற்றி உங்களுடைய வெற்றி மட்டுமல்ல, முதலமைச்சருடைய வெற்றியாக அமையும் என்று கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கரு.தியாகராஜன், புதூர் சேகர், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜயப்பன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், அருண்குமார், பொதும்பு தனசேகர், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், பேரூர் செயலாளர்கள் ரகுபதி, பால் பாண்டியன், மனோகரவேல் பாண்டியன், சத்தியபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஸ்ரீதர், சோழவந்தான் கிரி,

பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன், துணைத் தலைவர்கள் சாமிநாதன், கார்த்திக், லதா கண்ணன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் நடராஜன், கண்ணன், கார்த்திகேயன், சந்தனகருப்பு, தவசதீஷ், சோழவந்தான் பெரியசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் ம.தி.மு.க. புறநகர் மாவட்ட செயலாளர் மார்நாடு, மார்க்சிஸ்ட் மற்றும் இந்தியகம் யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள் குமரேசன், பாலமுருகன், வி.சி.க. பொதுச் செயலாளர் தமிழாளன், கொங்கு இளைஞர் தனியரசு பேரவை மாவட்ட செயலாளர் தயாளன், ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் சரவணன் உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

நெல்லை மேற்கில் கழக சட்டத்துறை சார்பில் "வார் ரூம்" - இரா.ஆவுடையப்பன் திறந்து வைத்தார்!

நெல்லை, மார்ச் 25 –

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தேர்தல் பணிக்கு நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞரணி சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் சட்டத்துறையின் "WAR ROOM அலுவலகத்தை நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், நெல்லை மாநகர (கிழக்கு) பொறுப்பாளர் ஏ.எல்.பி. தினேஷ்,

மாவட்ட துணை செயலாளர் மா.மைக்கேல், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ. செல்வ சூடாமணி, ஒன்றிய செயலாளர்கள் அம்பை கிழக்கு பரணி ஆர்.சேகர், அம்பை மேற்கு பா.ஜெகன், ஆலங்குளம் தெற்கு எம். சிவக்குமார், மாவட்டப் பிரதிநிதி எஸ்பி.எம். பிரபாகரன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செ.நயினார்,மாவட்ட கவுன்சிலர் அருண் தபசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.